RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22346

OPEN ACCESS

# ஜவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களின் குடும்ப அமைப்பு

பொ. இரவீந்திரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

# Family Structure of Javadhu Hill Tribes

P. Ravindaran [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-629002, Tamil Nadu, India.

* Corresponding Author:
ravindrean@gmail.com

Received: 23-04-2022
Revised: 30-06-2022
Accepted: 05-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Javvadu Hill is a historical hill. Malayali tribes have been living on this hill for centuries. Humans live in a family system. A family is formed as a result of the marriage of a man and a woman. Family plays a major role in the development of individual and society. The family structure of the Javwad hill tribes falls under the dichotomy of joint family and separate family. If you want to be a joint family in Javwadu Hill, you should not divide the property, like land and house, among your brother and your son. Most of the people living on this hill have leveled the land from 16 feet to 20 feet or 22 feet by 22 feet and built the house. Houses are mostly single-roomed. In front of every house are two paddy fields. Emphasis on natural food products. They eat kelvaragu porridge for breakfast.

**Keywords:** Javadhu Malai, Kutumpa Amaippu, Kutumpattin Panikal, Malaiyala Palankutikalin Kutumpa Amaippu, Kuttuk Kutumpam, Tanikutumpam, Pankittumurai, Talaimai Poruppu, Kudiyiruppukal, Unavukal

## முன்னுரை

ஜவ்வாது மலை வரலாற்றுச் சிறப்புமிக்க மலையாகும். இம்மலை எண்ணற்ற இயற்கை வளங்களைக் கொண்டுள்ள மலை. இம்மலையின் இயற்கை வளத்தினை பற்றியும், சிறப்பினைப் பற்றியும் சங்க இலக்கியத்தில் மலைபடுகடாம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. ஜவ்வாது மலையானது வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு உட்பட்டு அமைந்துள்ளது. இம்மலையின் பரப்பளவு வடமேற்குத் திசையில் அமிர்திலிருந்து சிங்காரப்பேட்டை வரை 80 கிலோமீட்டர் நீண்டும், ஆலங்காயத்திலிருந்து மேற்கு கிழக்காக தும்பக்காடு வரை 32 கிலோமீட்டர் விரிந்தும் காணப்படுகிறது. இம்மலையில் பண்ணெடுங்காலமாக மலையாளி என்னும் பழங்குடிகள் வாழ்ந்த வருகின்றனர். இந்த மலையாளி பழங்குடிகளின் குடும்பங்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விரிவாக ஆராயும் விதமாக இந்த ஆய்வு கட்டுரை அமையவுள்ளது.

## குடும்ப அமைப்பு

உலகில் வாழும் உயிரின வகைப்பாட்டியலில் மனித இனம் மட்டுமே குடும்பம் என்ற அமைப்பிற்குள் கட்டுப்பட்டு வாழ்ந்து வருகின்றது. "மனித சமூகத்தில் மிகத் தொன்மையான நிறுவனமாக திகழ்வது குடும்பம் (சங்கப் பாடல்களில் இது கடும்பு[1]எனப்படுகிறது) ஆகும். இது மானிட வாழ்வின் தொடக்கத்திலிருந்தே காணப்படுகிறது." (Bakthavathsala Bharathi, 2016) குடும்பம் எல்லாச் சமுதாயங்களிலும் இருந்து வருகிறது. "குடும்பம் என்பது இயக்கமுள்ள சிந்தாந்தத்தையே குறிக்கிறது.

அது என்றைக்கும் இயங்காதிருப்பதில்லை" (Mathaiyan, 2010) குடும்பம் என்ற அமைப்பிலிருந்துதான் சமூகமானது வளர்ந்திருக்க வேண்டும். குடும்பம் என்பது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் செய்துக் கொண்டதன் விளைவாக அமையும்." குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம். பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இடம் பெற வேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்ற உறவை ஏற்படுத்திக்கொள்ளும் பொழுதுதான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள்" (Bakthavathsala Bharathi, 2016) என்று பக்தவத்சல பாரதி கூறுகின்றார்.

## குடும்பத்தின் பணிகள்

குடும்பம் தனிமனிதனின் வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகிறது. குடும்பம் இல்லையென்றால் மனிதனிடம் அன்பும், அரவணைப்பும் இருக்காது. ஒரு தனி மனிதன் பொருளாதார ரீதியாக வளருவதற்கும், தன் வளர்ச்சி நிலையை தனிமைப்படுத்திக் காட்டவும் குடும்பமே அடித்தளமாக உள்ளது. குடும்பம் இல்லையெனில் மனிதனுக்கு வளர்ச்சி இல்லை என்று சொல்லலாம். "குடும்பம் தனி மனிதருக்காகவும் சமுதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது. இது பாலியல் இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது என்பார் லெவியும் பாலர்சும். ஆக்பர்ன், நிம்கா◌ஃப் ஆகியோர் குடும்பமானது அன்பு செலுத்துமிடமாகவும், பொழுதுப் போக்கிடமாகவும் பாதுகாப்பிடமாகவும், சமய செயல்கள் செய்யுமிடமாகவும், கல்வியளிக்குமிடமாகவும் பணியாற்றுகிறது என்பர். மேலும் சில அறிஞர்கள் குடும்பத்தின் பணிகளைப் பலவிதமாக விரித்துக் கூறுகின்றனர்." (Bakthavathsala Bharathi, 2016)

## மலையாளி பழங்குடிகளின் குடும்ப அமைப்பு

ஜவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களின் குடும்ப அமைப்பானது கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற இரு வகைமைகளுக்குள் காணப்படுகின்றது. "குடும்பத்தின் அமைப்பு இதுதான் என்று மிகச் சுருக்கமாக வரையறுத்துக் கூற வியலாது. இது ஒரு குறிப்பிட்ட நிலையில் தொடங்கி பல நிலைகளைத் தாண்டி அதன் அமைப்பில் முழுமைப் பெறுகின்றது" (Bakthavathsala Bharathi, 2016) மலையாளி மக்களின் குடும்பத்தில் மகனோ, மகளோ திருமணம் என்ற அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்லும் வரை தாய் தந்தையுடன் வசித்து வருகின்றனர். திருமணம் முடிந்தப் பிறகு ஒரு சிலரைத் தவிற மற்றவர் பெற்றோரை விட்டு விலகி கணவன் மனைவி தனிக் குடும்பமாக வாழ்கின்றனர்.

## கூட்டுக்குடும்பம்

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடி இனத்தில் திருமணம் செய்துக் கொண்டப் பிறகு ஒரு சிலர் மட்டுமே கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். கூட்டுக்குடும்பம் என்பது ஒரு ஆண் திருமணம் செய்துக் கொண்டு தன் தாய், தந்தை, சகோதரன், சகோதரிகள், தாத்தா, பாட்டி என அனைவரும் சேர்ந்து வாழ்வதாகும். இதனடிப்படையில் ஜவ்வாது மலையில் கூட்டுக்குடும்பமாக ஒரு ஆண் திருமணம் செய்து கொண்டு தாய், தந்தை, சகோதரன், சகோதரி, தாத்தா, பாட்டி என வாழ்ந்து வருகின்றனர். ஜவ்வாது மலையில் கூட்டுக்குடும்பம் மிகவும் குறைந்து 15% விழுக்காட்டினர் மட்டுமே காணப்படுகின்றனர். இம்மலையில் கூட்டுக்குடும்பமாக வாழ வேண்டுமானால் நிலம், வீடு போன்ற சொத்துக்களை தந்தை தன் மகன்களுக்குப் பங்கிடக்கூடாது. இங்கு கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றவர்கள் விவசாயம் சார்ந்த அனைத்து வேலைகளையும் குழுவாகச் செயல்படுகின்றனர். நேர் வழியிலும், கிளை வழியிலும் உறவினர்கள் ஒன்று சேர்ந்து வாழும் குடும்பம் கூட்டுக் குடும்பம் (Joint Family) என கூறப்படும். கூட்டுக் குடும்பத்தின் அடிப்படைப் பண்பானது இரத்த உறவுள்ள உறுப்பினர்களே இணைந்து வாழ்வர். இதனாலேயே கூட்டுக்குடும்பம் இரத்த உறவுக் குடும்பம் (Consanguine Family) என்று கூறப்படும்" (Bakthavathsala Bharathi, 2016) என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

## தனிக்குடும்பம்

தனிக்குடும்பம் என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் நடந்தப் பிறகு பெற்றோர்களால் அவர்களுக்கென தனிக்குடித்தனம் அமைத்துக் கொடுப்பது அல்லது திருமணமான கணவனும் மனைவியும் தனிக்குடும்பமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆகும். "திருமணமான தம்பதியினரும் அவர்களின் மனமாக மக்களும் குடும்பத்தின் உறுப்பினர்களாவார்கள்" (Bakthavathsala Bharathi, 2016) இதனடிப்படையில் மலையாளி பழங்குடி மக்களின் தனிக்குடும்ப அமைப்பு முறையினைக் காணமுடிகிறது. ஜவ்வாது மலையில் ஒரு ஆண் திருமணம் செய்துக்கொண்டு தனிக் குடும்பம் அமைப்பினுள் பெரும்பான்மையினர் காணப்படுகின்றனர். இம்மலையில் குறிப்பாக 85 சதவீத விழுக்காட்டினர் தனிக்குடும்பம் என்ற முறையில் வாழ்ந்து வருகின்றனர். இம்மலையில் வாழக்கூடிய மக்கள் தனிக்குடும்பம் என்ற அமைப்பினையைச் சிறந்ததாகக் கருதுகின்றனர்

## பங்கீட்டு முறை

ஜவ்வாது மலையில் கூட்டுக்குடும்பமாக இருக்க வேண்டுமானால் நிலம், வீடு போன்றச் சொத்துக்களை தன் சகோதரன், தன் மகன் ஆகியோருக்கு பங்கீடு செய்யக்கூடாது. பங்கீடு செய்தால் தன் சகோதரன் தன் மகன் திருமணம் முடிந்தவுடன் ஊர் பஞ்சாயத்து நீங்கள் தனி குடித்தனம் என்று அவர்களுக்கு பங்குப் போடுகின்றனர். சொத்துக்களைப் பங்கீடு செய்யவில்லையென்றால் மட்டுமே ஆண்மகன் திருமணம் செய்துக்கொண்டப் பிறகும் அவனை கூட்டுக்குடும்பமாக அந்த சமூகம் ஏற்றுக்கொள்கிறது. ஒரு குடும்பத்தில் சொத்துக்களைப் பங்கீடு செய்யவில்லையென்றால் திருமணம் செய்து கொண்ட சகோதரர்கள் எத்தனைப்பேர் வேண்டுமானாலும் கூட்டுக் குடும்பமாக வாழலாம். ஆனால் சொத்தை பங்கீடு செய்திருந்தால் ஆண்மகன் திருமணம் செய்துக்கொண்டவுடன் அந்த சமூகம் அவனை நீ தனி குடும்பத்தில் வாழ்கின்றாய் என்று அவனுக்கு பங்கீடு செய்கின்றது.

சொத்து பங்கீடாமல் இருந்து ஆண்மகன் திருமணம் செய்துக்கொண்டு தனிக்குடும்பம் செல்ல விரும்பினால், அந்த ஆணின் தந்தை ஊர்க்கவுண்டரிடம் (ஊர்த் தலைவர்) சென்று என்னுடைய சொத்தை என் மகன், மகன்களுக்கு பங்கீடு செய்து தர வேண்டும். அதனால் நீங்கள் ஊர் மக்களை அழைத்துவந்து பங்கீடு செய்து தர வேண்டும் என்று கூறுகின்றார். அதன்படி ஊர்க்கவுண்டர் கோல்காரர் மூலம் ஊர் மக்களுக்கு தகவல் தெரிவிக்கின்றார். பின்னர் ஊர் மக்கள் ஊர் கவுண்டர் தலைமையில் சொத்துக்களை பங்கீட்டுத் தருகின்றனர். சொத்தில் பங்கு எடுத்துக்கொண்ட ஆண்மகன் அன்று முதல் தனிக்குடும்பம் என்ற நிலையை பெறுகின்றான். அன்று முதல் திருவிழா காலங்களில் தெய்வத்திற்குப் பலியிடப்படும் ஆடு, பன்றி போன்ற மாமிசங்களில் இருந்து பங்கு பெற்றுக் கொள்கின்றான் அன்று முதல் ஊரில் நடைபெறம் நிகழ்வுகளுக்கு ஊர் பஞ்சாயத்து அவனுக்கு அறிவிப்புக் கொடுக்கின்றது. அது மட்டுமில்லாமல் திருவிழா நடத்துவதற்கும், கோயில் கட்டுவதற்கும் ஊர் பஞ்சாயத்து குறிப்பிடும் தொகையை கொடுக்கின்றனர். பங்கீடு செய்து பங்கு போட்டப் பிறகு அவன் எந்தக் குற்றம் செய்தாலும் அவனையேச் சாரும். எனவே ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடி மக்கள் தனிக் குடும்பம், கூட்டுக்குடும்பம் என்று அடையாளப்படுத்தும் விதமாக பங்கீட்டு முறை அடித்தளமாக உள்ளது.

## தலைமைப் பொறுப்பு

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற கட்டமைப்பினுள் வாழ்ந்து வருகின்றனர் இவ்வின மக்கள் குடும்ப பராமரிப்பு முதலாக தொடங்கி பொருளாதாரத் தேவைகள், சமூக நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் குடும்பத்தில் உள்ள தாய், தந்தை இருவருமே பொறுப்புகள் வகிக்கின்றனர். அவ்வாறு பொறுப்புகள் இருந்தாலும் தந்தையே குடும்பத்தை வழிநடத்தச் செய்கின்றார் அதனால் தந்தையே குடும்பத்தின் காவலாளி, பாதுகாவலர், பொறுப்பாளி என்றுக் கூறலாம். சில குடும்பங்களில் தந்தையானவர் சில காரணங்களால் செயல்பட இயலாத நிலையில் இருந்தால் அக்குடும்பத்தின் தலைமைப் பொறுப்பிற்கு தாய் அங்கம் வகிக்கின்றனர். சில குடும்பங்களில் தந்தை இயலாத நிலையில் குடும்பத்திலுள்ள பொறுப்பினை ஏற்று வழிநடத்துகின்றார்.

## குடியிருப்புகள்

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் பெரும்பாலோர் வீடு கட்டுவதற்கு 16 அடி முதல் 22 அடி அல்லது 20 அடி முதல் 22 அடி வரை இடத்தைச் சமன் செய்கின்றனர். பின்னர் காட்டுக்குச் சென்று கப்பாக இருக்கின்ற மரத்தினை ஏழு அடி அளவு ஆறு முதல் 8 வெட்டி எடுத்துவருகிறனர். பின்பு பெரிய தூலத்தினை (நீளமான பெரிய மரம்) 3 முதல் 4 வெட்டி எடுத்து வந்து ஒவ்வொரு கப்பையும் இணைக்கும் படி கப்பின் மீது வடக்கு தெற்காக வைக்கின்றனர். பின்னர் கூசம், மேட்டுவலை என்ற மரத்தினைக் (உறுதியான மரம்) கொண்டு கூரை வடிவத்திற்கு கொண்டு வருகின்றனர். பின்னர் மோட்டுவலை மரத்தில் பெரிய மூங்கில் அல்லது மரக்கொம்பை துளையிட்டு இணைக்கின்றனர். அதன்பிறகு தென்னங்கீற்றினைக் கட்டி அதன்மீது காட்டுப்புல்லை வேய்கின்றனர். பின்னர் மண்ணைப் பிசைந்து கப்பு மறையும்படி ஆறு அல்லது ஏழு அடி சுவர் மண்ணால் எழுப்புகின்றனர்.

மலையாளி பழங்குடி மக்களின் வீடுகள் பெரும்பாலும் ஒரே அறை கொண்டதாக இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டின் முன் பகுதியிலும் இரு திண்ணைகள் அமைத்திருக்கின்றனர். மாலை நேர வேலைகளில் ஓய்வு எடுப்பதற்கும் பிறரோடு கலந்து உரையாடுவதற்கும் இது போன்ற திண்ணைகள் வடிவமைத்துள்ளனர். தற்போது காட்டுப்புல் கிடைக்காத காரணத்தால் ஒரு சில வீடுகள் மட்டுமே புல்லால் வேயப்பட்ட வீடுகள் காணப்படுகின்றது. தற்போது வீடுகள் சிமெண்ட் சீட்டுகளைக் கொண்டு மூடப்பட்ட வீடுகளும், கான்கிரீட் வீடுகளும் அமைத்துள்ளனர். எனவே ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் இவ்வகையான வீடுகளில் கூட்டு குடும்பமாகவும் தனிக் குடும்பமாகவும் வசித்து வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது. கூரை வீடுகள் மிகவும் குறைந்த அளவே தற்போது காணப்படுகிறது.

## உணவுகள்

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் உண்ணும் உணவில் இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மேலும் விவசாயம் செய்து உணவுப் பொருட்களை உண்கின்றனர். இவர்கள் காலை வேளையில் கேழ்வரகு கூழ், கம்பங்கூழ் அல்லது கஞ்சி உணவாக உட்கொள்கின்றனர். கூழுடன் இரவு செய்த பலாக்கீரையை கூட்டு உணவாக சேர்த்துக் கொள்கின்றனர். மதிய வேளையில் கிழங்குகள், களி, கஞ்சி, பலாப்பழம் ஆகியவற்றை உணவாக உண்டனர். இரவு வேளையில் சாதம் செய்து அவற்றுக்கு கூட்டாக பலாக்கீரை, பூசணிக்காய், பண்ணைக்கீரை ஆகியவற்றை உண்டு வந்தனர். ஜவ்வாது மலைவாழ் பழங்குடி மக்கள் சிறுதானிய உணவுகளை மரபின் வழியாக அதிக அளவில் உண்டு வந்தனர். தற்போது சிறுதானிய உணவுகளின் நன்மைகளை அறியாமல் பெரும்பாலான மக்கள் சிறுதானியங்களை சந்தையில் விற்று நெல் அரிசி உணவுகளை விலைக்கு வாங்கி உணவாக உண்கின்றனர். அதனால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்படுகின்றனர் என்பதை கள ஆய்வின்வழி அறிய முடிகின்றது.

## முடிவுரை

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் கூட்டுக்குடும்பம் தனிக்குடும்பம் என்ற கட்டமைப்பிற்குள் வாழ்ந்து வருகின்றனர் இவர்களின் குடும்பங்கள் தனிமைப்பட்டு இருந்தாலும் இவர்கள் குழு என்ற கட்டமைப்பிற்குள் வாழ்கின்றனர். குழு அமைப்பின் மூலம் எந்த ஒரு பொருளாக இருந்தாலும் பங்கிட்டு வாழும் மரபை கொண்டுள்ளனர். பங்கீடு செய்வதன் மூலம் அவர்கள் தன் குடும்பத்தை குழுவின் மூலம் தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். எனவே இம்மலையில் வாழும் பழங்குடிகளின் குடும்பங்கள் அவர்களின் சமூகத்துடன் எப்படி ஒன்றியுள்ளது என்பதை கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

## References

Bakthavathsala Bharathi, (2016) Manidaviyal Kotpadukal, Adaiyalam Pathippakam.

Bakthavathsala Bharathi, (2016) Panpattu Manidaviyal, Meyyappan Pathippakam, Chithamparam.

Mathaiyan, P (2010) Sanga Elakkiyatthil Kutumbam, New Century Book House Pvt., Ltd. Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License